# "ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றும் வருவதில்லை"

*மழைக்கு ஒரு தகப்பனுண்டோ?*
*பனித்துளிகளை ஜநிப்பித்தவர் யார்?*
*உறைந்த தண்ணீர் யாருடைய வயிற்றிலிருந்து புறப்படுகிறது?*
*ஆகாயத்தினுடைய உறைந்த பனியைப் பெற்றவர் யார்?*
*(யோபு 38:28, 29).*

*ஒவ்வொரு விளைவுக்கும் ஒரு காரணம் இருக்க வேண்டும் என்ற உண்மையானது தெய்வீகத்துவம் இருப்பதற்கான காரணங்கள் யாவற்றிலும் மிகத் தெளிவானதாக உள்ளது, இது தர்க்க ரீதியாகக் காரணமற்ற காரணம் ஒன்றுக்குப் பின்னோக்கி வழி நடத்துகின்றது.*[1]

## எடுத்துரைக்கப்பட்ட விவாதம்

*கிரேக்கத் தத்தவ ஞானியான பிளேட்டோ என்பவர், "கடவுள்கள்" இருக்கின்றனர் என்பதில் நம்பிக்கை கொள்வதற்கு மூன்று காரணங்களைச் சுட்டிக்காட்டினார், ஆனால் அதில் "முதலாவது இடத்தில்" அட்டவணைப் படுத்தப்பட்டது, "பூமி, சூரியன் மற்றும் நட்சத்திரங்கள் மற்றும் இந்த அண்டம் ஆகியவற்றின்" இருப்பு என்பதாகவே இருந்தது. அவர், "கடவுள்களே சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் ஆகியவற்றை உண்டாக்கினர்" என்று கூறினார்.*[2] *சங். 19க்கு ஜோசப் அடிஸன் அவர்கள் இசையமைக்கையில், வானவியல் பொருட்கள் யாவும் "ஒரு மகிமையான குரலொலியை உச்சரித்ததை" அவர் கேட்க முடிந்தது:*

*எங்களைப் படைத்தது தெய்வீகக் கரம் என்று*
*ஒளி வீசும் நாள்தோறும் அவை பாடும் இன்று.*[3]

*நிலவானது எதைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது? அமெரிக்க வானவியல் பயணிகள் நீல் ஆர்ம்ஸ்ட்ராங்கும் எட்வின் ஆல்ட்ரின்னும் ஜூலை 2 1969ல் 48.5 பவுண்டு எடையுள்ள பொருளை நிலவிலிருந்து எடுத்து வந்தனர். அதில் (1) நுண்மையாக்கப்பட்ட எரிமலைக் கல்* (igneous rock), *(2) நடுத்தர அளவில் நுண்மையாக்கப்பட்ட எரிமலைக் கல், (3) பிரெஸியா (ஒன்றாக ஒட்ட வைக்கப்பட்ட கோணக் கற்கள்) மற்றும் (4) நுண்மங்கள் (சிறு பொருட்கள்) ஆகியவை அடங்கியிருந்தன. இந்த மாதிரிகளைப் பரிசோதனை செய்ததில், பதினாறு பூலோக மூலகங்கள் அதில்*

அடங்கியிருந்தது வெளிப்பட்டது. அவைகளில் மிக முக்கியமானவை டைட்டேனியம், சிலிக்கோன், அலுமினியம், இரும்பு, மெக்னீஸியம், கால்ஷியம், சோடியம் மற்றும் பொட்டாசியம் ஆகும். நிலவானது நமது பூமியிலிருந்து அவ்வளவாக மாறுபடாத நிச்சயமான பொருட்களால் ஆனதாக உள்ளது. காரணமின்றி ஒரு பொருள் திடீரென ஏற்படுவதில்லை என்று பகுத்தறிவு நமக்குப் போதிக்கின்றது. ஒன்றுமில்லாமையிலிருந்து எதுவுமே வர முடியாது.

காரண அறிவுள்ள மக்களுக்கு, நிலாவின்மேல் அமைதிக் கடல் என்கிற இடத்தில் கழுகு என்ற விண்கலம் வந்திறங்கிய போது நிலவுப் பாறைகளின் திடத் தன்மையானது உண்மை நிலையை அர்த்தப்படுத்துகின்றது, மற்றும் உண்மை நிலை என்பது ஒரு காரணத்தைக் கோருகின்றது. நிலவானது விண்கலம் தரையிறங்கக் கூடிய திட பூமியைப் போன்ற உண்மைப் பொருட்களைக் கொண்டிருக்கக் கூடுமானால், மற்றும் அப்பொருட்கள் பூமிக்குத் திரும்ப கொண்டு வரப்படக் கூடுமானால் நிலவுப் பொருளை உண்டாக்கியவர் இருப்பதாக யூகிக்கப்பட வேண்டும். விண்வெளிப் பயணிகளால் ஏற்படுத்தப்பட்ட ஆதாரமானது, நிலவை உண்டாக்கியவர் எப்படி அல்லது ஏன் இருக்கத் தொடங்கினார் என்று சாட்சியளிப்பதில்லை. எல்லையற்ற வகையில் உண்டாக்குபவர் ஒருவர் இருக்கின்றார் என்பதை ஒருவர் யூகித்துக் கொள்ளாத வரையில், உண்டாக்கப்பட்டிராத உண்டாக்குபவர் ஒருவர் ஏதோ ஓரிடத்தில் உள்ளார் என்று கூறுவது அரிது. ஆகையால், காரண அறிவானது உண்டாக்கப்படாத உண்டாக்குபவர் ஒருவர் உள்ளதை அறிவிக்கின்றது.

உண்டாக்குபவர் உண்டாக்கப்படாதவராயிருந்தால், அவர் எப்பொழுதுமே உள்ளவராயிருக்க வேண்டும், இது அவர் நித்தியமானவர் என்று அர்த்தப்படுகின்றது மற்றும், அவர் தாம் உண்டாக்குபவராக இருப்பதற்கான திறமையை (வேறு எவரிடத்திலிருந்தாவது) பெற்று கொள்ளாதிருந்தவரென்றால், அவர் சுயசார்புடையவராயிருக்க வேண்டும், சுயநிறைவுடையவராக இருக்க வேண்டும். எனவே நிலவு உள்ளது என்ற விஷயம் மட்டுமே கூட, சுயசார்புடைய நித்தியமான சிருஷ்டிகர் இருப்பதைச் சான்றளிப்பதாகத் தோன்றுகின்றது.

நிலவு போன்ற பொருட்கள் இயற்கையின் இல்லத்தின் பாகம் என்ற வகையில் பல மக்கள் கருத்துக் கொண்டுள்ளனர். அவர்கள், எந்த ஒரு வீடும் யாரோ ஒருவரால் உண்டாக்கப்படும், எல்லாவற்றையும் உண்டு பண்ணினவர் தேவன் (எபி. 3:4ஐக் காணவும்) என்று காரணம் அறிகின்றனர். உண்டாக்கப்பட்ட பொருளில் உண்டாக்கியவரின் பிரசன்னம் அறியப் பட்டிருப்பதால், உண்டாக்கியவர் இருந்துள்ளார் என்று அறிய, ஒருவர் உண்டாக்கியவரைக் காண வேண்டும் என்பதில்லை. இயற்கையின் இல்லமாகிய உலகத்தின் படைப்பானது "உண்டாக்கப்பட்டிருக்கிறவை களினாலே'' புரிந்து கொள்ளப்பட்டுள்ளது, இது அவிசுவாசிகள் எவ்விதத்திலும் சாக்குப் போக்குச் சொல்லாதிருக்கும்படி செய்கின்றது (ரோமர் 1:19, 20ஐக் காணவும்).

நிலவின் இருப்பானது உண்டாக்குபவர் ஒருவரின் அவசியத்தைச்

சுட்டிக்காட்டுவதுடன் மட்டுமின்றி, வான் வெளியில் அதன் இயக்கமானது அதை இயக்குபவர் ஒருவரின் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. இயக்குபவர்களின் எல்லையற்ற தொடர் ஒன்றிற்காக ஒருவர் வாதம் செய்யாத வரையில், இயக்கத்தைத் தொடங்க உதவி தேவைப்படாத ஒரு இயக்குவிப்பவர் இருந்தார். இயக்குபவர், பொருட்களை இயக்கும் தம்முடைய சக்தியில் சுயநிறைவு உடையவராக இருந்தார். மேலும், இயக்கத்தைத் தொடங்கி வைக்க ஒன்றுமில்லாமையிலிருந்து அது தமது சக்தியைத் தொடங்காத வரையிலும் அது நித்திய இயக்குதலாயிருக்கிறது. இப்படிப்பட்ட சுயநிறைவுடைய இயக்குபவைகள் எத்தனை உள்ளன என்று தர்க்க வியலானது உறுதிப்படுத்துவதில்லை, ஆனால் குறைந்தபட்சம் ஒன்று உள்ளதை அது சுட்டிக்காட்டுகின்றது. மேலும், அண்டத்தின் உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றிப்பானது அவ்விதமானது ஒன்றே ஒன்று உள்ளதை சுட்டிக்காட்டுகின்றது. ''உலகமானது மோசமாக ஆளுகை செய்யப்படுவதை மறுக்கின்றது; 'மோசமானதே பலருக்குச் சட்டமாக உள்ளது; ஒரே அதிகாரி இருக்கட்டும்'.''[4]

## விவாதம் மறுக்கப்பட்டது

பூமி மற்றும் மனிதனின் படைப்புக்கு வழி நடத்தக் கூடிய பழங்காலக் கூற்றான ''ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றும் வருவதில்லை'' என்ற பழமொழியானது எவ்வளவுதான் நம்பக் கூடியதாக இருப்பினும், பூமியையும் மனிதனையும் ஒன்றுமில்லாமையே படைத்தது என்று கூற கற்றறிந்த மனிதர்கள் சிலர் தேர்ந்துகொள்வதுண்டு. கேம்ப்ரிட்ஜில் உள்ள செயின்ட் ஜான் கல்லூரியின் இயற்பியலாளரும் அறிவியலறிஞருமான பேராசிரியர் ஃபிரெட் ஹாயில் அவர்கள், அண்டத்தின் தாயானவளு(ஹைட்ரஜன் வாயு)க்கு தோற்றம் என்று ஒன்றுமில்லை என்று எதார்த்தமாக உறுதிப்படுத்தி, அதை நித்திய உதயக் கொள்கை என்று அழைக்கின்றார்.[5] கற்றுத் தேர்ந்த மற்றொரு தத்துவ ஞானியான, ஆர்தர் ஸ்கோப்பென் ஹாவர் (1788-1860) என்பவர் இந்த அண்டத்தை உண்டாக்கியது என்பது ''பார்வையற்ற ஒரு விருப்பமே'' ஆகும் என்று கூறினார்,[6] மற்றும் ஹென்றி பெர்க்சன் (1859-1941) என்பவர் ''உணர்வற்ற மதி நுட்பத்தினால்'' உண்டாக்கப்பட்ட பரிணாமம் பற்றிப் பேசினார்.[7] பிந்திய சொற்றொடரானது ''உணர்வுள்ள சிந்தையற்ற தன்மை'' என்பது போல முரண்பாடுள்ளதாகும்; மனிதர்கள் தங்கள் சிந்தையில் தேவனைக் கொண்டிருக்க மறுக்கும்போது, எந்த அளவுக்குச் செல்வார்கள் என்பதை இதன் பயன்பாடு காண்பிக்கின்றது.

ஸ்காட்லாந்தைச் சேர்ந்த தத்துவ ஞானியான டேவிட் ஹியூம் (1711-76) என்பவர், ''ஒன்றுமில்லாமையில் இருந்து ஒன்றும் வருவதில்லை'' என்ற பழம் கூற்றிலிருந்து பலம் எடுத்துக் கொள்ளத் தம்மால் முடிந்த அளவு சிறந்ததைச் செய்தார். நாத்திகர் என்ற வகையில் ஹியூம் என்பவர், இந்தப் பழங்கூற்றின் வல்லமை பற்றி நன்கு அறிந்திருந்தார்; இது, இந்த அண்டமானது ஒரு காரணத்தைப் பெற்றிருந்தது என்று காண்பிப்பதால்,

அவரைத் தார்க் கோலினால் குத்தியது. இதனை, "பழங்காலத் தத்துவத்தின் மத ஈடுபாடு அற்ற கூற்று" என்று பழித்துரைத்து, அவர் அதைப் பின்வருவது போன்ற காரணத்தினால் உறுதிப்படுத்தினார்: "ஏதொன்றும் ஏதொன் றையும் உண்டாக்கவல்லது போலத் தோற்றம் அளிக்கலாம்" - "மிகவும் விளையாட்டுத்தனமான கற்பனைக்கு ஒப்புக் கொடுக்கப்படும் ஏதொன்றும் இருக்கக் கூடும்."[8] இருப்பினும், ஹியூம் என்பவர் சிலவேளைகளில் மிகவும் நியாயமானவராயிருந்து, "இவ்விதமாக அறிவியல்கள் யாவும், ஒரு முதல் அறிவுக் கூர்மையுள்ள படைப்பாளர் இருந்தார் என்று நாம் கருத்தற்ற வகையில் ஒப்புக் கொள்ளும்படி நம்மை வழி நடத்துகின்றார்."[9]

அபெர்டீன்னில் உள்ள மாரிஸ்கால் கல்லூரியில் பேராசிரியராக இருந்த ஜேம்ஸ் பீட்டி அவர்கள், 1770ல் ஹியூமின் தர்க்கத்தை மறுத்து எழுதினார்: "ஆகையால், இந்தப் பழங் கூற்றானது [இருப்பதெல்லாம் ஏதோ ஒரு காரணத்திலிருந்தே புறப்படத் தொடங்குகின்றது] பகுத்தறிவுள்ள மனம் ஒவ்வொன்றும் உண்மை என்று ஒத்துக்கொள்கின்ற, ஒத்துக் கொள்ள வேண்டிய பொது அறிவுணர்வின் கொள்கைகளில் ஒன்றாக உள்ளது என்று மீண்டும் கூறுகின்றோம்; இது நிரூபிக்கப்பட முடியும் என்பதால் அல்ல, ஆனால் இயற்கையின் விதியானது நாம் இதை ஆதாரமின்றியே நம்பும்படியாகத் தீர்மானித்துள்ளது, மற்றும் இதன் எதிர்க் கருத்தை நாம் அறிவிற்கு ஏற்றதல்லாததாகவும், சாத்தியமற்றதாகவும், மற்றும் கருத்துருவாக்க முடியாததாகவும் நோக்க வேண்டும் என்று தீர்மானித் துள்ளது."[10] குற்றம் கண்டு பிடிப்பவர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட பலத்த முயற்சிக்குப் பின்னாலும், ஒரு வீடு என்பது மனிதனால் உண்டாக்கப்பட்ட சிறியதாயிருப்பினும், அல்லது இயற்கையின் மகாபெரிய வீடாயிருப்பினும் அது கட்டுபவர் ஒன்றைக் கொண்டிருந்தது என்பது தெளிவாகவே உள்ளது.

சுத்தமான அறிவு என்ன செய்ய முடியும் மற்றும் அனுபவமானது எதை செயல்விளக்கப் படுத்துகின்றது என்பதற்கிடையில் வேறுபடுத்திக் காட்டியதில் கூட டேவிட் ஹியூம் புகழ் பெற்றவராயிருந்தார். ஒரு பந்து இரண்டாவது பந்தை மோதும் போது, இரண்டாவது பந்து நகருகின்றது. அப்படிப்பட்ட ஒன்று நடந்ததை ஆதாம் ஒருபோதும் பார்த்திருக்கவில்லை என்றால், காரண அறிவினால் மட்டும் ஒரே விளக்கமாகத் தற்செயல் நிகழ்வை உறுதிப்படுத்தியிருக்க முடியாது. இருக்கத் தொடங்குகின்ற எல்லாம் ஏதோ சில காரணங்களிலிருந்தே தொடங்குகின்றன என்ற கூற்றில் தவறொன்றை காண்பிக்க ஹியூம் தீர்மானமாய் இருந்தார்.

"ஏதாவது காரணத்திலிருந்து எந்த செயல் விளைவையாவது மனம் எப்பொழுதுமே கருத்துருவாக்கிக் கொண்டிருக்க முடியும், மற்றும் எந்த நிகழ்வும் மற்றொன்றைப் பின்பற்றி வரக் கூடச் செய்யும்; குறைந்தபட்சம், புலன் கடந்த அறிவியலிலாவது நாம் கருத்துருவாக்கும் அனைத்தும் சாத்திய மாகின்றது" என்று ஹியூம் கூறினார்.[11] மேலும் அவர், "ஆகையால் காரணத்தின் கருத்தை இருப்பின் தொடக்கத்திலிருந்து பிரித்தல் என்பது கற்பனைக்குத் தெளிவாகச் சாத்தியமுள்ளதாகும்" என்றும் கூறினார்.[12]

மோதலின் போது இரண்டாவது பந்தானது முதல் பந்திலிருந்து

*தரப்பட்ட சக்தியின்றியே தானாக நகருகின்றது என்று கற்பனை செய்து கொள்வது கையளவில் சாத்தியமாக உள்ளது; ஆனால் அப்படிப்பட்ட கற்பனையானது அறிவுப் பூர்வமானதாக இருப்பதில்லை. அது போலவே, இந்த அண்டமானது காரணமற்றதாக உள்ளதென்று ஒருவர் கொள்கை யளவில் கற்பனை செய்து கொள்ள முடியும், ஆனால் அந்தக் கருத்தானது அறிவுப் பூர்வமானதாக இருப்பதில்லை. ஹியூமின் நுணுக்கமான விவாதம் என்பது மதிநுட்பமற்றதாக உள்ளது, அது தேவனுடைய இருப்பிற்கான தற்செயல் விவாதத்தின் பலத்தை நிரூபிக்க மட்டுமே செய்கின்றது. இவருடைய விவாதமானது உண்மை வாழ்க்கை பற்றிய பவுலின் எச்சரிக்கை யிலிருந்து எடுத்துக்காட்டு ஒன்றை தருகின்றது: "லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல" (கொலோ. 2:8).*

*தேவனுடைய இருப்பின்மை என்பதினால் தேவனுடைய இருப்பிற்கான ஆதாரத்தை அனுமதித்திராத அதே வகையான தர்க்க அறிவானது தேவன் இருப்பதில்லை என்பதை ஒருவர் நிரூபிப்பதையும் எப்பொழுதுமே கருத்துருவாக்கத்தில் தடை செய்கின்றது. ஏனெனில் அவரது இருப்பு என்பது கருத்துருவாக்கக் கூடியதாக உள்ளது! இதனால், இந்தக் காரண அறிவு மேற்கொண்டு தொடர முடியாததாகின்றது. காரணம் மற்றும் செயல் விளைவுக்கான விதிக்குத் திரும்புவதே ஒரே தீர்வாக உள்ளது. இந்த விதியானது, "மனித அறிவின் பெரும் பகுதியை உருவாக்குகின்ற ஒழுக்க அறிவுடைமையின் அஸ்திபாரமாகவும் மனித செயல்பாடு மற்றும் நடக்கை யாவற்றிற்கும் ஆதார மூலமாகவும் உள்ளது."[13] இவ்விதமாக, தேவன் இருக்கின்றார் என்பது ஒப்புவமையற்றதாகும் என்பதற்கான தற்செயல் வாதத்தை மதிநுட்பமுள்ள, பகுத்தறிகின்ற மற்றும் பட்சபாதமற்ற மனதினாலேயே மேற்கொள்ள முடியும்.*

*முதல் இயக்குவிப்பாளர் பற்றிப் பிளேட்டோ எழுதினார். அவர் தாமாக இயக்கம் பெற வருவதற்கு முன்பிருந்த ஒன்பது வகைகளிலான சார்பியக்கத்தை அட்டவணைப்படுத்தினார், அதில் அவர், "மற்ற எல்லாரையும் விட பதினாயிரம் மடங்கு மேன்மையாய்" இருந்தமைக்காகப் புகழுகின்றார்; ஏனென்றால் "சுய இயக்கத்தில்" இருந்ததாக அதுவே "இயக்கம் யாவற்றுக்கும் தோற்றுவாயாக" இருக்க வேண்டும்.[14]*

*இதன் பிறகு, "ஆயிரத்தின் மேல் பத்தாயிரக் கணக்கில் உள்ள அமைப்புகள்" இயக்கத்தில் அமைக்கப்பட்டாலும், இயக்கம் "யாவற்றின் தொடக்கமாக" பிளேட்டோ "சுய இயக்கக் கொள்கையின்" அவசியத்தை வைத்தார். இயக்குவிப்பாளர்களின் எண்ணற்ற இறங்கு வரிசையானது தர்க்க ரீதியாகப் பராமரிக்கப்பட முடியாது என்று அவர் காண்பித்தார். (அதாவது, இயக்கங்களின் தொடர் ஒன்றை ஒருவர் பின்னோக்கிக் காண்கையில், வேறொன்றினாலும் இயக்கப்படாத ஆனால் தானே இயங்குகின்ற ஒன்றை அவர் நிறைவாகக் காண்கின்றார்.) இந்த முதல் இயக்குவிப்பாளர் நித்தியமானவராய் இருக்க வேண்டும் என்று காண்பித்து,*

அரிஸ்டாட்டில் என்பவர் இதே தர்க்கத்தை மீண்டும் கூறினார். "நித்தியமானது என்று ஒன்றும் இல்லாதிருந்தால், உண்டாகுதல் என்று ஒன்றும் இராது; ஏனெனில், உண்டாகுதலின் செயல்பாட்டில் சில கீழ்ப்பட்டிருக்க வேண்டியதாக உள்ளது, அதாவது, ஏதோ ஒன்றிலிருந்து இவை யாவும் வர வேண்டியதாக உள்ளது; இந்த வரிசையின் கடைசி உறுப்பினர் படைக்கப்படாதவராயிருக்க வேண்டும், ஏனெனில் ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றும் வருவதில்லையாதலால் இந்தத் தொடரானது ஏதோ ஒன்றைக் கொண்டு தொடங்குவதாய் இருக்க வேண்டும்."[15]

ஹியூம், ''கண்டுபிடிப்பாளர்''[16] என்று தம்மை உரிமைகோரிக் கொள்ளும் தமது விவாதத்தின்மேல் ஏராளமாக எழுதிய பிறகு, அவர் தம் நிலைப்பாட்டினைப் பிற்பாடு மாற்றிக் கொண்டதாகக் காணப்படுகின்றது. அவர் பின்வருமாறு எழுதினார்:

> நாம் ஒரு வீட்டைக் காண்போமென்றால், ... அதற்கு ஒரு கட்டிடக் கலைஞர் அல்லது கட்டுபவர் இருந்தார் என்று மாபெரும் உறுதிப்பாட்டுடன் நாம் முடிவு செய்கின்றோம்; ஆனால் இந்த அண்டமானது ஒரு வீட்டைப் போல ஒத்த தன்மையைப் பெற்றுள்ளது, அதாவது அதே போன்ற உறுதிப்பாட்டுடன் அதே விதமான காரணத்தைக் கண்டறிய முடியும் என்றோ, அல்லது அந்த ஒப்பீடானது இங்கு முற்றான மற்றும் முழுமையானதாக உள்ளது என்றோ நீங்கள் உறுதிப்படுத்த மாட்டீர்கள் என்பது நிச்சயமாகும். இவ்விடத்தில் ஒத்த காரணம் இருப்பதாக அதிகபட்சம் நீங்கள் ஒரு கற்பனை, வெறும் யூகம் அல்லது முன் அனுமானத்திற்குப் பாசாங்கு மட்டுமே செய்ய முடியுமாதலால் போலி நடிப்பு மிகத் தெளிவாயுள்ள ...[17]

இருப்பினும், ''இப்படிப்பட்ட ஒருவர் இருத்தல் என்பது அவசியமானது'' என்று ஒருவர் கூற முடியாது என்று உரைத்ததின் மூலம் அவர் தமது மாற்றிய கூற்றைத் தகுதிப் படுத்தினார். "ஒருவர் இருக்கின்றார் என்பதே சாத்தியமான செயல் விளைவுகள் யாவற்றுக்கும் போதுமான காரணமாய் உள்ளது'' என்று ஒருவர் ஒப்புக் கொள்வாரென்றால், காரணத்திலிருந்து இவ்விவாதம் உரிமைகோருகின்ற யாவும் அதுவேயாகும். ஜெர்மானிய தத்துவ ஞானியான இம்மானுவேல் காண்ட் (1724-1804) என்பவர், உலகமானது "முழு நிறைவான முக்கியமான காரணத்திலிருந்து" உதித்தது என்று ஒப்புக் கொண்டார், ஆனால் "அவசியமானதின் இருப்பு அதினாலேயே உண்டாயிற்று" என்று பேசுவதை அவர் மறுத்தார்.[18]

அந்த "முழு நிறைவான அவசியமான காரணமானது" "தன்னாலேயே உள்ள அவசியமான இருப்பாக" இல்லாதிருந்தால், அது "தன்னாலேயே இருக்கின்றதாக" உள்ள வேறொரு இருப்பிலிருந்து பெறப்பட்டதாகத் தோன்றுகின்றது. இவ்விதமாக அவர் ''தன்னாலேயே இருப்பதன் அவசியத்தை'' எதிர்கொண்டாக வேண்டிய பொழுது அந்த நாளை வெறுமனே தள்ளி விட்டவராயிருந்தார். நிறைவாக, அந்த இருப்பை

‘‘ஒழுங்குபடுத்தும் கொள்கை’’ என்று மட்டுமே அவர் குறைவாக்கிய பொழுது, அது எப்படி “முழுநிறைவான அவசியமான காரணத்துடன்’’ சமப்படுத்தப்பட முடியும் என்று ஒருவர் வியப்படைகின்றார்.

ஹியூம் என்பவர், “நாம் ... எல்லா வகையான கருத்துக்களையும் பற்றிய சிந்தனை, நம்பிக்கை மற்றும் தர்க்கம் செய்தல் ஆகியவற்றின் முழுமையான அவசியத்தின் கீழ் இருக்கின்றோம், மற்றும் அடிக்கடி கூட, நம்பிக்கை மற்றும் பாதுகாப்புடன் மேலேறுகின்றவர்களாக இருக்கின்றோம்’’ என்றெழுதினார்.[19] ஹியூம் தன்னை ஒரு “மத அவநம்பிக்கையாளர்” என்று குறிப்பிட்டுக் கொண்டிருந்தாலும், அப்படிப்பட்ட இருப்பானது “ஆரோக்கியமான, விசுவாசிக்கின்ற கிறிஸ்தவராயிருப்பதற்கு முதலாவதும் மிகவும் இன்றியமையாததுமான படியாகும்’’ என்று கூறினார்.[20] இப்படிப்பட்ட ஒரு அறிவுத் திறமுள்ள மனமானது அவரே கூறியபடி, ‘‘அடிநிலையில், சொல்லால் ஆன மற்றும் எந்த துல்லியமான தீர்மானத்தையும் ஒப்புக் கொள்ளாத’’[21] வழக்குகளுடன் வீணாய்ப் போனது மிகவும் வருந்தத் தக்கதாக உள்ளது. சார்புத் தன்மையில் ஒன்றுமில்லாமை பற்றி அதிகமான அமளிக்குப் பிறகு அவர், சுத்தமான மதம் என்பது, “வாழ்வில் முதன்மையான மற்றும் ஒரே மாபெரும் ஆறுதலாக உள்ளது; மற்றும் எதிர்நிலை நல்வாய்ப்புகளின் தாக்குதல்கள் எல்லாவற்றின் மத்தியிலும் நமது அடிப்படை ஆதாரமானது நிலைத்துள்ளது; மனித கற்பனையால் ஆலோசனை தர முடிகின்ற மிக அதிகம் ஒப்புக் கொள்ளக் கூடிய பிரதிபலிப்பாக உள்ளது. உண்மையான ஆத்திகம் மட்டுமே” என்ற கூற்றிற்கு அவர் கடைசியாகத் திரும்பினார்.[22] ஹியூம் தனது மத நம்பிக்கையின்மையைக் காத்துக் கொண்டு, முரண்பாடாக எழுதியிருப்பாரென்றால், அவர் அதைச் சுட்டிக்காட்டி இருந்ததில்லை.

(ஒன்றுமில்லாமையிலிருந்து சில வந்தன என்பது போன்ற) கற்பனை செய்தலானது அறிவுப் பூர்வமானது அல்ல. இம்மானுவேல் கான்ட், “முற்றிலும் அவசியமான இருப்பு பற்றிப் பேசுதலை” அனுமதிக்காத போது, அவர் ஹியூமின் தர்க்கத்தைப் பின்பற்றினார்.[23]

இப்படிப்பட்டதொரு விவாதத்தில், தவறாக வழி நடத்தும் கருத்துடன் கான்ட் வாழ முடியாதிருந்தது, மற்றும் பின்னாளில் அவர் “விசுவாசத்தினாலேயே”[24] எல்லாம் அறிந்த, நீதியான, சர்வ வல்லமையுள்ள, சகல விதத்திலும் நல்ல, நித்தியமான மற்றும் எங்கும் நிறைந்த ‘‘முதல் இருப்பை” “அவர்” என்று குறிப்பிட்டார்.[25]

இதுபோலவே, ஹியூம் என்பவரும் தனது உயிரோட்டமற்ற, கண்டிப்பான (புகழ்ச்சியற்றதும் ஆனால் நடைமுறைக்கு ஒவ்வாததும், தவறாக வழி நடத்தக் கூடியதாகவும் உள்ள) விவாதத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டதாக, அதில் இருந்து மாறி விட்டதாகவே உறுதியாகத் தோன்றுகின்றது. மற்றும் அவர், “தெய்வீகத்தின் இயற்கைப் பண்புகளை”[26] ப் பற்றிக் குறிப்பிட்டார் மற்றும் “தெய்வீகப் பொருளே நமது விசுவாசமாகும்” என்றும் கூடக் குறிப்பிட்டார்[27] இவைகளை அவர் முரண்பாட்டின் எவ்விதக் குறியீடுமின்றிக் குறிப்பிட்டார்.

ஹியூம் மற்றும் கான்ட் ஆகியோரால் முன்பு பயன்படுத்தப்பட்ட அதே

கண்டிப்பான தர்க்கத்தை வால்ட்டர் காஃப்மென் என்பவரும் பயன்படுத்தி, "அவசியமான" என்ற பெயர் உரிச் சொல்லானது "இருப்பு" என்ற பெயர்ச் சொல்லாக மாற்றியமைக்கப்பட முடியாது, ஏனெனில் அப்படிப்பட்ட செயலானது தடை செய்யப்பட்ட இணைப்புச் செயலாக உள்ளது என்று உறுதிப்படுத்தினார். இருப்பினும், பிற்பாடு ஹியூம் என்பவர் இப்படிப் பட்ட ஒரு விவாதத்தை "முற்றிலும் வார்த்தைகளால் மட்டுமே ஆனது"[28] என்று குறிப்பிட்டதையும் கான்ட் தேவனைப் புரிந்து ஏற்கும்படி சென்றதையும் காம்ஃப்மன் சுட்டிக்காட்டத் தவறி விட்டார், இதைச் செய்யவும் அவர் மறுத்து விட்டார்.[29]

கான்ட் என்பவர், "புலனுணர்வுள்ள உலகத்தில் தவிர ... தற்செயலின் கொள்கை என்பது அர்த்தம் எதையும் கொண்டிருப்பதில்லை"[30] என்றும் வாதிட்டார். இந்த உலகிலேயே நாம் உள்ளோம், புலனுணர்வின் உலகிற்குப் பொறுப்பேற்க தற்செயல் கொள்கைகளை நாம் தூண்டி விடுகிறோம். ''ஆகையால், வானவியல் ஆதாரம் என்று அழைக்கப்படு பவற்றின் திட்டவட்டமான முழு பலமும் வெறும் கருத்துக்களிலிருந்து வந்த மூலம் பற்றிய ஆய்வு நிருபனத்தின் உண்மை நிலையிலேயே நிலைத்துள்ளது"[31] "உள்ளதான பொருளின் முற்றிலுமான அவசியத்தின் சாத்தியக் கூற்றினைக் கொண்ட" "சுத்த கருத்துக்களின் மத்தியில்" அனு பவத்தை நாடுதலை ஒருவர் கைவிட நேர்ந்துவிடுவதால் அவர் இவ்வாறு எழுதினார்.

''அந்த வானவியல் ஆதாரத்தின் மறைந்திருந்த'' யூகங்களின் "முழுமையான ஒரு கூட்டினை" முறைப்படி விவரித்துக் காட்டுவதற்குக் கான்ட் முயற்சி செய்திருந்த பிறகு, அவர் தனது மனதை மாற்றிக் கொண்டதாகத் தோன்றுகின்றது. அவர், ''சாத்தியமான எல்லா செயல்விளைவுகளுக்கும் காரணமாய் இருக்கப் போதுமான முற்றான ஒரு பொருளின் இருப்பு உளதென்று ஒத்துக்கொள்ளுதல் அனுமதிக்கப் படலாம்"[32] என்று எழுதினார்.

## முடிவுரை

நிலவின் இருப்பானது அதை உண்டாக்கியவரைச் சுட்டிக் காட்டுகின்றது, நிலவின் இயக்கமானது அதனை இயக்குபவரைச் சுட்டிக் காட்டுகின்றது என்பதே முடிவுரையாக உள்ளது. இந்த உண்டாக்கியவர்/ இயக்குபவர் சுயசார்புடையவராகவும் மற்றும் நித்தியமானவராகவும் இருக்க வேண்டும் என்று தர்க்கவியல் கூறுகின்றது.

குறிப்புகள்

[1]சாதாரணமாக இந்த விவாதமானது "வானவியல் விவாதம்" என்று அழைக்கப் படுகின்றது, ஆனால் இதன் பொருளடக்கமானது இதனை "காரணத்திலிருந்து வரும் விவாதம்'' என்று அழைக்கும்படிக் கேட்கின்றது. ஒழுங்கு முறைக்குரியதான

“வானவியல்” என்ற வார்த்தையின் அர்த்தமானது காரணத்திலிருந்து வரும் விவாதத்திற்குப் பொருந்துவதில்லை. “வானவியல்” என்ற வார்த்தையானது “ஒழுங்கு படுத்துதல், ஒழுங்குமுறைப்படுத்துதல்” என்று அர்த்தப்படும் *kosmeo* என்ற வார்த்தையிலிருந்து பெறப்படுகின்றது. தேவனுடைய இருப்பிற்கான செல்லத் தகுந்த/மதிப்புள்ள ஒரு விஷயமானது அண்டத்தின் முறையான ஒழுங்கமைவில் காணப்படுகின்றது, ஆனால் இது தற்செயலின் விவாதமாக இருப்பதில்லை. [2]Plato, *The Works of Plato*, Book X, *Laws*, trans. B. Jowett (New York: Dial Press, n.d.), 453. [3]Joseph Addison, “The Spacious Firmament on High,” *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [4]G. R. G. Mure, ed., *Aristotle* (New York: Oxford University Press, 1964), 173. [5]James Oliver Buswell Jr., *A Systematic Theology of the Christian Religion* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1962), 1:82. [6]Ibid., 1:84. [7]Ibid., 1:85. [8]David Hume, “An Enquiry Concerning Human Understanding,” in *Hume Selections*, ed. Charles W. Hendel Jr. (New York: Charles Scribner’s Sons, 1955), 191, 192n. [9]Hume, “The Dialogues Concerning Natural Religion,” in *Selections*, 385. [10]James Beattie, *An Essay on the Nature and Immutability of Truth: in Opposition to Sophistry and Scepticism* (Edinburgh, Scotland: A. Kincaid and J. Bell, 1770), 111.

[11]David Hume, “An Abstract of a Treatise of Human Nature,” in *An Enquiry Concerning Human Understanding*, ed. Charles W. Hendel Jr. (Indianapolis: Liberal Arts Press Division of the Bobbs-Merrill Co., 1955), 188. [12]Hume, “The Treatise of Human Nature,” in *Selections*, 29. [13]Hume, “Enquiry,” 192. [14]Plato, *Plato Selections*, ed. Raphael Demos (New York: Charles Scribner’s Sons, 1927), 429-30. [15]Aristotle, *Metaphysics*, quoted in John Hick, ed., *Classical and Contemporary Readings in the Philosophy of Religion* (Englewood Cliffs, N.J.: Prentice-Hall, 1965), 467. [16]Hume, “Abstract,” 198. [17]Hume, “Dialogues,” 304. [18]Immanuel Kant, *Kant Selections*, ed. Theodore Meyer Greene (New York: Charles Scribner’s Sons, 1957), 258. [19]Hume, “Dialogues,” 390n. [20]Ibid., 401.

[21]Ibid., 390n. [22]Ibid., 397. [23]Immanuel Kant, “Critique of Pure Reason,” in *Kant Selections*, ed. Theodore Meyer Greene (New York: Charles Scribner’s Sons, 1957), 244. [24]Immanuel Kant, “Critique of Judgement,” *in Kant Selections*, ed. Theodore Meyer Greene (New York: Charles Scribner’s Sons, 1957), 525. [25]Ibid., 509. [26]Hume, “Dialogues,” 390. [27]Ibid., 401. [28]Ibid., 390n. [29]Walter Kaufmann, *Critique of Religion and Philosophy* (New York: Harper & Bro., 1958), 111. [30] Kant, “Critique of Pure Reason,” 255.

[31]Ibid., 254, குறிப்பு எண் 1ல் வானவியல் விவாதத்திற்கான கலந்துரையாடலைக் காணவும். தோற்றவியல் விவாதமானது இருத்தலின் கேள்விக்குரியதாக உள்ளது, கான்ட்டர்பரியைச் சேர்ந்த அன்செல்ம் அவர்களின் சிந்தனையின்படி, இல்லாத ஒருவரைப் பற்றி அறிவது இயலாது; ஆகையால், தேவன் இருக்கின்றார். [32]Ibid., 255.